Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC. 385/2023 PW-1**

Name : மணிவண்ணன்
Father / Husband name : முத்து
Village : மேல்மருவத்தூர்
Age : 51
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.05.2026

Complainant present. Accused present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 12.01 - 12.25 )**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் மருவத்தூரில் வசிக்கிறேன். புகார் மனுவில் மருவத்தூர் மருத்துவமனையில் பணிசெய்கிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் கேன்டீனில் பணி செய்வதாக சொல்லியுள்ளேன். எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.30,000/- வரும். நான் பணி செய்வதற்கான அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கேன்டீனில் வேலை செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருவத்தூரில் வசிக்கவில்லை என எதிரி பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. திண்டிவனத்தை சேர்ந்த வெங்கடேசன் என்பவருக்கு பணம் வாங்கிக்கொடுக்கும் மீடியேட்டராக வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல.

2. எதிரிக்கும் எனக்கும் மேற்படி வெங்கடேசன் மூலம் பழக்கம், மற்றபடி தெரியாது என்றால் சரியல்ல. 02.10.2022 அன்று எதிரி ரூ.7,00,000/- கடன் கேட்டதாக எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால்

சொல்லியுள்ளேன். அவ்வாறு எதிரி என்னிடம் கடன் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 06.10.2022 அன்று எனது நிலத்தை காண்பித்து ரூ.10,00,000/- கடனாக பெற்று அதில் ரூ.7,00,000/- ஐ எதிரிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அந்த அடமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. யாரிடம் அடமானம் வைத்தேன் என்றால் கவிதா, கேசவராயன்பேட்டை, மேல்மருவத்தூர், செய்யூர் அஞ்சல், செங்கல்பட்டு. மேற்படி விவரத்தை சட்ட அறிவிப்பு, புகார் மனு, பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை, அதனால் அவ்வாறு ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 30.05.2023 அன்று கொடுத்தார்.

3. வங்கியில் எந்த தேதியில் காசோலையை செலுத்தினேன் என்றால் 31.05.2023 ஆகும். செலுத்தப்பட்ட காசோலை என்ன ஆனது என்றால் Stop Payment என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. Stop Payment என்ற காரணத்திற்காக திருப்பப்பட்ட பிறகு நேரடியாக வழக்கு பதிவு செய்தேனா என்றால் இல்லை, எதிரியிடம் கேட்டேன், 10 நாட்கள் கழித்து எதிரி தராததால் எனது வழக்கறிஞர் மூலம் 19.06.2023 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பினேன், அதன்பிறகு வழக்கு பதிவு செய்தேன். எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு பற்றி எனது புகார் மனு, பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. எதிரி கொடுத்த பதில் அறிவிப்பில் எதிரிக்கும் வெங்கடேசன் என்பவருக்கும் 21.01.2023 அன்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகவும், அதில் வழக்கின் காசோலை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது, அது எனது வழக்கிற்கு பாதகமாக உள்ளதால் அதனை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

4. 21.01.2023 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி 153106, 153107 இரண்டு காசோலைகள் மற்றும் நிரப்பப்படாத இரண்டு பிரம்சரி நோட், பச்சை பேப்பர் - 2, நிரப்பப்படாத 50 ரூபாய் ஸ்டேம்ப் பேப்பர், எதிரியின்

மகன் ஜெயராமன் கையொப்பம் செய்த வெற்று பச்சை பேப்பர் - 1, எழுதப்படாத ஸ்டேம்ப் பேப்பர் - 1 ஆகிவற்றை வெங்கடேசனிடம் கொடுக்கப்பட்டது, அந்தக்காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன், எனக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.நான் வெங்கடேசன் என்பவருக்கு பதிலாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எதிரி எந்தவித கடனும் பெறவில்லை, வெங்கடேசனுடன் கூட்டுச்சேர்ந்து நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.7,00,000/- கடன் கொடுப்பதற்கு எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>புகார்தாரர் தரப்பில் மறுவிசாரணை</u>

06.10.2022 அன்று கவிதா என்பவரிடம் அடமானம் வைத்த ஆவணம் தற்போது என்னிடம் ஆவணமா என்றால் ஆமாம். **06.10.2022 தேதியிட்ட அடமான கடன் பத்திரத்தின் நகல் ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

06.10.2022 கடன் பத்திரத்தில் எதிரிக்கு பணம் கொடுப்பதற்காக என்ற வாசகம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணம் நான் ஏற்கனவே 2020 வாங்கிய கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது, எதிரிக்கு கொடுப்பதற்காக கடன் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் காசோலையை எந்த மொழியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் தமிழில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதனை நான் பூர்த்தி செய்தேன் என்றால் இல்லை, எதிரி பூர்த்தி செய்தார். எதிரி பொதுவாக ஆங்கிலத்தில் பூர்த்தி செய்வார், நான் பூர்த்தி செய்ததால் தமிழில் பூர்த்தி

செய்தேன் என்றால் சரியல்ல. நானும் வெங்கடேசனும் சேர்ந்து எதிரியை ஏமாற்ற இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.